**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சாத்தான்குளம்**
**முன்னிலை : செல்வி.ம.வி.தேவி ரக்க்ஷா, B.B.A.,L.L.B (Hons)**
**நீதித்துறை நடுவர், சாத்தான்குளம்**
**2026 ஆம் ஆண்டு, ஜுன் மாதம் 05 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**
**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 187/2023**
**CNR.No.TNTT110039242023**
*****

| | | |
|---|---|---|
| **1.** | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண். (Name of the Police Station and Crime Number of the Offence) | **அரசுக்காக,**<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>நாசரேத் காவல் நிலையம்,<br>(குற்ற எண்.21/2023) |
| **2.** | எதிரியின் பெயர் (Name) | **திரு. கணேசன், வயது 31,**<br>த/பெ. சுப்பிரமணியன்,<br>நொச்சிக்குளம்.<br>(தற்போது) 116, கொர்னேலியஸ் தெரு,<br>நாசரேத்.<br><br>கூலி |
| **3.** | எதிரியின் தந்தை பெயர் (Father's Name) | |
| **4.** | எதிரியின் தொழில் (Occupation) | |
| **5.** | எதிரியின் முகவரி (Residence) | |
| **6.** | எதிரியின் வயது (Age) | |
| **7.** | குற்ற நிகழ்வு நாள் (Occurrence) | 31.03.2023 |
| **8.** | புகார் தேதி (Complaint) | 01.04.2023 |
| **9.** | எதிரி கைது செய்யப்பட்ட தேதி (Apprehension) | எதிரிகள் காவல்நிலைய ஜாமீனில் சென்றதால் கைது செய்யப்படவில்லை |
| **10.** | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் (Release on Bail) | எதிரிகள் காவல்நிலைய ஜாமீனில் சென்றதால் கைது செய்யப்படவில்லை |
| **11.** | Commitment | ----- |
| **12.** | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி (Commencement of Trial) | 04.05.2026 |
| **13.** | விசாரணை முடிக்கப்பட்ட தேதி (Closure of Trial) | 05.06.2026 |
| **14.** | தண்டனை அல்லது உத்தரவு (Sentence or Order) | முடிவில், எதிரி இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் கீழான குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, அவரை கு.வி.மு.ச பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| **15.** | தீர்ப்பின் நகல் வழங்குதல் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த முடிவு (Service of Copy of Judgment or Finding on Accused) | எதிரி விடுதலை செய்யப்படுகிறார் |
| **16.** | கு.வி.மு.ச பிரிவு 313(1)(b) இன் கீழ் எதிரியை விசாரணை செய்த | 05.06.2026 |


DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.06.05 16:54:20 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | நாள் (Date of examination of accused U/s 313(1)(b) | | | |
| **17.** | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்குவிசாரணை செய்யப்பட்ட நாள் (Date of examination in chief and cross examination of witnesses) | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | PW1 | 02.06.2026 | 02.06.2026 |
| | | PW2 | 03.06.2026 | 03.06.2026 |
| **18.** | வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் (Date of Cognizance) | 24.05.2023 | | |

இவ்வழக்கானது என் முன்பு 05.06.2026 இன்று இறுதி விசாரணைக்காக வந்தபொழுது எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.சுடலைமுத்து அவர்கள் முன்னிலையாகியும் அரசு தரப்பில் குற்றவியல் வழக்கறிஞர் நிலை-II செல்வி.பிரீத்தி ராணி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதத்தை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**தீர்ப்புரை**

**1. குற்றச்சாட்டு :-**

**1.1.** இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான சந்தனசெல்வன் நொச்சிகுளத்தில் குடியிருந்து வந்தார். அவரது குடும்பத்தினருக்கும் எதிரியின் குடும்பத்தினருக்கும் இடையே முன்விரோதம் இருந்து வந்தது. 31.03.2023 ஆம் தேதியன்று காலை 7 மணி அளவில் புகார்தாரரும் அவருடைய அம்மா தமிழ்செல்வியும் பிள்ளையான்மனை குளத்துகரையில் மாடு கட்டுவதற்கு சென்ற போது அங்கு வந்த எதிரி புகார்தாரரையும் அவரது அம்மாவையும் பொது இடத்தில் வைத்து ஆபாசமான வார்த்தைகளால் பேசினார். எதிரியிடம் புகார்தாரர் ஏன் எங்களை திட்டுகிறீர்கள் என கேட்டபோது எதிரி கையில் மறைத்து வைத்திருந்த அருவாளை கொண்டு புகார்தாரரை ஓங்கி வெட்டினார். புகார்தாரர் சற்று விலகிய போது தலையில் எதிரி வைத்திருந்த அருவாள் வெட்டியதில் புகார்தாரரின் கண் மேல்புறம் மற்றும் கீழ் பகுதியில் புகார்தாரருக்கு காயம் ஏற்பட்டது. எதிரி புகார்தாரரையும் அவரது அப்பா செந்தூர்பாண்டியையும் விரைவில் வெட்டாமல் விடமாட்டேன் என கொலை மிரட்டல் விடுத்து புகார்தாரரின் அம்மாவை பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் வைத்து புகார்தாரரின் அம்மாவுக்கு மிகுந்த அவமானத்தையும், மனஉளைச்சலையும் ஏற்படுத்தி குற்றம் புரிந்துள்ளார்.

**1.2.** எனவே, எதிரிக்கு எதிராக இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் கீழான குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளி என்று அரசு தரப்பில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. கு.வி.மு.ச பிரிவு 207 இன் கீழ் நகல் :-**

அரசு தரப்பில் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து ஆவணங்களின் நகல் கு.வி.மு.ச பிரிவு 207-இன் கீழ் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

**3. கு.வி.மு.ச பிரிவு 239 மற்றும் 240 இன் கீழ் விசாரணை :-**

3.1. எதிரிக்கு போதுமான கால அவகாசம் கொடுத்த பிறகு, அவர் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்ற இறுதி அறிக்கை பற்றி கேட்ட போது, அவர் பொய் வழக்கு என்றும், குற்றவாளி இல்லை என்றும் கூறினார்.

3.2. இருதரப்பிலும் கேட்கப்பட்டு, வழக்கு கோப்புகளை ஆய்வு செய்த போது, எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு



DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.06.05 16:54:25 +0530

பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் கீழ் குற்றச்சாட்டுகள் வனைய போதுமான முகத்தோற்ற சான்றுகள் இருந்ததால், எதிரி மீது அதே பிரிவுகளின் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து, குற்ற சாராம்ச சங்கதிகள் குறித்து அவரிடம் விளக்கி கூறிய போது, எதிரி பொய் வழக்கு என்றும், வழக்கு விசாரணை செய்யப்பட வேண்டும் என்றும் கூறினார். ஆகையால் இவ்வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. **<u>அரசு தரப்பு சாட்சிகள்</u> :-**

பட்டியல் சாட்சியில் இருந்து ஒரு நபரும் கூடுதல் சாட்சியாக காவல் உதவி ஆய்வாளர் திரு. நாகராஜன் என்பவரும் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆக அரசு தரப்பில் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள்; அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. **<u>அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கு</u> :-**

**5.1.** அ.சா.1 – சந்தனசெல்வன், நொச்சிகுளத்தில் குடியிருந்து வந்தார். அவரது குடும்பத்தினருக்கும் எதிரியின் குடும்பத்தினருக்கும் இடையே முன்விரோதம் இருந்து வந்தது. 31.03.2023 ஆம் தேதியன்று காலை 7 மணி அளவில் அ.சா.1யும் அவருடைய அம்மா தமிழ்செல்வியும் பிள்ளையான்மனை குளத்துகரையில் மாடு கட்டுவதற்கு சென்ற போது அங்கு வந்த எதிரி அ.சா.1 யையும் அவரது அம்மாவையும் பொது இடத்தில் வைத்து ஆபாசமான வார்த்தைகளால் பேசினார். எதிரியிடம் அ.சா.1 ஏன் எங்களை திட்டுகிறீர்கள் என கேட்டபோது எதிரி கையில் மறைத்து வைத்திருந்த அருவாளை கொண்டு அ.சா.1 ஐ ஓங்கி வெட்டினார். அ.சா.1 சற்று விலகிய போது தலையில் எதிரி வைத்திருந்த அருவாள் வெட்டியதில் அ.சா.1 இன் கண் மேல்புறம் மற்றும் கீழ் பகுதியில் காயம் ஏற்பட்டது. எதிரி அ.சா.1 யையும் அவரது அப்பா செந்தூர்பாண்டியையும் விரைவில் வெட்டாமல் விடமாட்டேன் என கொலை மிரட்டல் விடுத்து அ.சா.1 இன் அம்மாவை பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் வைத்து மிகுந்த அவமானத்தையும், மனஉளைச்சலையும் ஏற்படுத்தினார்.

**5.2.** கடந்த 01.04.2023 ஆம் தேதி 16.00 மணிக்கு தலைமை காவலர் திருமதி.பூமணி என்பவர் சந்தன செல்வன் என்பவர் திருவைகுண்டம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்தபோது கொடுத்த புகார் வாக்குமூலத்தை (அ.சா.ஆ.2) பெற்று நிலையம் வந்து புகார் வாக்குமூலத்தின் தன்மையை வைத்து காவல்நிலைய குற்ற எண்.21/2023, இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(2) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் கீழ் முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.3) பதிவு செய்தார்.

**5.3.** வழக்கை மேல்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் திரு.ராய்ஸ்டன் 01.04.2023 ஆம் தேதி 17.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் தேவராஜ், வடிவேல் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தையும், அதன் சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டு பார்வை மகசர் (அ.சா.ஆ.4) மற்றும் மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.5) தயார் செய்தார். சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1 சந்தனசெல்வன் என்பவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர் திரு.ஜெயஸ்ரீ என்பவரை விசாரித்து அவர் வழங்கிய காயச்சான்றிதழ் (அ.சா.ஆ.6) கிடைக்கப்பெற்றார்.

**5.4.** புலன்விசாரணை அதிகாரியின் புலன் விசாரணையில் இருந்தும், சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும் வழக்கு சம்பவம் உண்மையென தெரிய வந்ததால் எதிரி மீது 05.04.2023 அன்று இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் கீழான


DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.06.05 16:54:27 +0530

குற்றங்களுக்கு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**6. <u>கு.வி.மு.ச பிரிவு 313 (1) (ஆ) இன் கீழ் விசாரணை</u> :-**

6.1. மேற்கண்ட அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றக்கூடிய சாட்சியங்களையும், சூழ்நிலைகளையும் கு.வி.மு.ச பிரிவு 313 (1)(ஆ) இன் கீழ் தொகுத்து, அவரிடம் விளக்கி கேட்ட போது, எதிரி பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும் மறுத்தார்.

6.2. மேலும், எதிரி தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்.

**7. <u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை</u> :-**

எதிரி மீது வனையப்பட்டுள்ள இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் கீழான குற்றச்சாட்டுகள் நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா?

**8. <u>சாட்சியங்கள் மதிப்பீடு</u> :-**

**8.1.** இந்த வழக்கில் காயம்பட்ட மற்றும் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 – சந்தனசெல்வன் அவருடைய சாட்சியத்தில், அவர் நொச்சிக்குளத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருவதாகவும், எதிரியை தெரியும் என்றும், எதிரியுடன் தற்போது சமாதானமாக சென்றுவிட்டதாகவும், சமாதானமாக போகும்படி யாரும் தூண்டவில்லை என்றும், வழக்கு சம்பந்தமாக அவருக்கு எதுவும் தெரியாது என்றும், அவரிடம் காண்பிக்கப்படும் புகார்வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து அவருடையது தான் அதிலுள்ள விபரங்கள் அவருக்கு தெரியாது என்றும், போலீசார் அவரை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**8.2.** இந்த வழக்கில் அ.சா.1 – சந்தனசெல்வன் கொடுத்ததாக உள்ள புகார்வாக்குமூலத்திற்கும், அதன் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ள அரசு தரப்பு வழக்கிற்கும் முரணாக அவர் சாட்சியம் அளித்ததால் அவரை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக்கி குறுக்குவிசாரணை செய்த போதிலும் அவரிடமிருந்து அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக எவ்விதமான சாட்சியமும் பெறவில்லை.

**8.3.** மேலும், அ.சா.ஆ.2– புகார்வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து அவருடையது என்று அ.சா.1 – சந்தனசெல்வன் ஒப்புக்கொண்ட போதிலும், அதில் எழுதியுள்ள வாசகங்களை உறுதிபடுத்த சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. ஆகையால், இந்த வழக்கில் கொடுக்கப்பட்டுள்ளதாக உள்ள புகார்வாக்குமூலம் அ.சா.1 – சந்தனசெல்வனால் கொடுக்கப்பட்டதா? என்பதும் சந்தேகம் கொள்ளும் வகையில் அமைகிறது. ஆவணத்தில் உள்ள கையொப்பத்தை நிரூபிப்பது வேறு, அதன் உள்ளடக்கத்தை நிரூபிப்பது வேறு என்பதால், அ.சா.1 – சந்தனசெல்வனின் சாட்சியம் மூலம் அ.சா.ஆ.2 புகார்வாக்குமூலம் அவரால் கொடுக்கப்பட்டது என்று நிரூபிக்கப்படவில்லை.

**8.4.** தவிர, அ.சா.1 தற்போது எதிரியுடன் சமாதானமாகிவிட்டதாகவும், வழக்கு சம்பந்தமாக அவருக்கு எதுவும் தெரியாது என்று சாட்சியமளித்துள்ளதால், அரசு தரப்பில் இதர சாட்சிகள் விலக்கிக்கொள்ளப்பட்டு காவல் உதவி ஆய்வாளர் திரு. நாகராஜன் என்பவர் அ.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். அவருடைய சாட்சியத்தை தவிர இந்த வழக்கில் எதிரிக்கு எதிராக வேறு சாட்சியம் எதுவும் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இந்த சூழ்நிலையில், புலன்விசாரணை கோப்புகளை பார்த்து சாட்சியமளித்துள்ள உதவி ஆய்வாளரின் சாட்சியம் மட்டுமே எதிரியை குற்றவாளி என்று முடிவு செய்ய போதுமானதல்ல.

**8.5.** இதன் மேலே பரிசீலனை செய்யப்பட்ட சாட்சியங்களின் ஒட்டு


DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.06.05 16:54:32 +0530

மொத்த தொகுப்பாக, அரசு தரப்பு வழக்கு நியாயமான சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்க தவறியுள்ளது என்று இந்த நீதிமன்றம் கருதி, இந்த வழக்கில் எதிரிக்கு சந்தேகத்தின் பலன் கிடைக்கக்கூடியது என்று முடிவு செய்கிறது.

**9. முடிவு:-**

**9.1.** முடிவில், எதிரி இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii) மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டம் கீழான குற்றச்சாட்டுகளுக்கு குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, அவரை கு.வி.மு.ச பிரிவு 248(1) இன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

9.2. இவ்வழக்கில் எதிரி ஆஜராக எழுதிக் கொடுத்த பிணை ஆவணம் இரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

9.3. இவ்வழக்கில் சொத்துப்பொருள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இத்தீர்ப்புரை, என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டும், என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டும், இன்று 05.06.2026 ஆம் தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.06.05 16:54:40 +0530

நீதித்துறை நடுவர்
சாத்தான்குளம்

**பிற்சேர்க்கை**

**1. அரசு தரப்பு சாட்சிகள் :-**

| அரசு தரப்பு சாட்சிகள் வரிசை எண் | அரசு தரப்பு சாட்சிகளின் பெயர் | அரசு தரப்பு சாட்சிகளின் விவரம் |
|---|---|---|
| அ.சா.1 | திரு. சந்தனசெல்வன் | நிகழ்நிலை புகார்தாரர் |
| அ.சா.2 | திரு. நாகராஜன் | காவல் உதவி ஆய்வாளர் |

**2. அரசு தரப்பு சான்றாவணங்கள் :-**

| வரிசை எண் | தேதி | ஆவண விபரம் | நிரூபணம் |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 01.04.2023 | புகார்வாக்கு மூலத்திலுள்ள அ.சா.1 இன் கையெழுத்து மட்டும் | அ.சா.1 இன் மூலமாக |
| அ.சா.ஆ.2 | 01.04.2023 | புகார்வாக்குமூலம் | அ.சா.2 இன் மூலமாக |
| அ.சா.ஆ.3 | 01.04.2023 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.2 இன் மூலமாக |
| அ.சா.ஆ.4 | 01.04.2023 | பார்வைமகஜர் | அ.சா.2 இன் மூலமாக |
| அ.சா.ஆ.5 | 01.04.2023 | மாதிரி வரைபடம் | அ.சா.2 இன் மூலமாக |
| அ.சா.ஆ.6 | 31.03.2023 | அ.சா.1 இன் காயச்சான்றிதழ் | அ.சா.2 இன் மூலமாக |

**3. அரசு தரப்பு சான்று பொருள் :-**இல்லை

**4. எதிரி தரப்பு சாட்சிகள் :-** இல்லை

**5. எதிரி தரப்பு சான்றாவணங்கள் :-** இல்லை

**6. எதிரி தரப்பு சான்று பொருட்கள் :-** இல்லை

**Case Summary**

**1.** எதிரி சிறையில் இருந்த நாட்கள் **:-** இல்லை
**2.** குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் - 24.04.2023
**3.** எதிரி முதலாவதாக விசாரிக்கப்பட்ட நாள் - 04.05.2026
**4.** எதிரி மீதான குற்றச்சாட்டு விளக்கி கேட்ட நாள் - 04.05.2026
**5.** இடைக்கால மனு விபரம் **:-**இல்லை
**6.** எதிரி தலைமறைவாக இருந்த விவரம் **:-** இல்லை
**7.** மாண்பமை மேல் நீதிமன்ற தடை உத்தரவு விபரம் - இல்லை

DEVI RAKSHA M V Digitally signed by DEVI RAKSHA M V Date: 2026.06.05 16:54:54 +0530

நீதித்துறை நடுவர்
சாத்தான்குளம்

**<u>குறிப்பு</u> :-**
**1.** விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்தார்.
**2.** சாட்சிகள் 3 வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
**3.** தீர்ப்பு விபரம் காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.